### தமிழ்நாடு அரசின் தலைமை காஜி

# சலாவுதீன் முகமது அயூப் சாகிபு மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மே 26 –**

**தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு மறைவு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:**

தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

கற்றறிந்த பேராசிரியரான அவர், தனது சமூகச் சேவைகளுக்காக என்றென்றும் நினைவுகூரப்படுவார். தன்னுடைய பண்பால் இஸ்லாமிய சமூகத்தினரின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றிருந்த அவரது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

நான் ஆயிரம் விளக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலந்தொட்டு, என் மீது பேரன்பு செலுத்தியவர் அவர். மூப்பெய்திய போதும், நான் பங்கெடுக்கும் இப்தார் நிகழ்வுகள் அனைத்திலும் தன்னுடைய உடல்நலன் ஒத்துழைக்கும் வரையில் பங்கேற்பேன் என்று சொல்லிய அவரை இன்று இழந்து வாடுகிறோம்.

அவரது பிரிவால் வாடும் இஸ்லாமிய மக்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு அரசின் தலைமை காஜி சலாவுதீன் முகமது அயூப் சாகிபு அவர்கள் மறைவெய்தியதையொட்டி, அவர்களின் இல்லத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.5.2025) நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்

# 1,175 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 26-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.5.2025) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 1,175 பயனாளிகளுக்கு 40,05,31,067 ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 125 நரிக்குறவர்களுக்கு (பழங்குடியினத்தவர்கள்) 3,59,61,812 ரூபாய் மதிப்பிலான இடங்களுக்கான வீட்டு மனைப் பட்டாக்களையும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

தொடர்ந்து 1,000 நபர்களுக்கு (125 நரிக்குறவர்கள் உள்பட) கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 லட்சம் வீதம் 35,00,00,000 மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் 50 பயனாளிகளுக்கு ஆட்சேபணையற்ற புறம்போக்கில் வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குதல் திட்டத்தின் கீழ் மொத்தம் 1,45,69,255 ரூபாய் மதிப்பிலான இடங்களுக்கான பட்டாக்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் நரிக்குறவர் இனத்தவர்கள் துணை முதலமைச்சர் அவர்களுக்கு பாசிமாலைகளை அணிவித்து மகிழ்ந்தார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களது குழந்தைகளுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பெயர் சூட்டினார்.

இந்நிகழ்ச்சியில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எம்.அப்துல்லா, துரை வைகோ, செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. வை.முத்து ராஜா, எம்.சின்னத்துரை, எஸ்.டி.ராமச்சந்திரன், தாட்கோ தலைவர் நா.இளைய ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

### வேதாரண்யம் – தலைஞாயிறு ஒன்றியத்தில்

# “மக்களுடன் முதல்வர் திட்டம்” - 126 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கோவி. செழியன் வழங்கினார்!

நாகை, மே 26 –

நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் பன்னத்தெரு ஊராட்சி மாராச்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், ஆய்மூர் ஊராட்சி மகாமழை மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்திலும், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்காரன்புலம்–3 ஊராட்சி நாடிமுத்து உதவிபெறும் தொடக்கப்பள்ளியிலும், ஆதனூர் ஊராட்சி அண்டர்காடு சமுதாயக்கூடத்திலும் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு 126 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 3 இலட்சத்து 93 ஆயிரத்து 979 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, மக்களை தேடி மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மக்களை தேடி எல்லாம் கிடைக்கும் வகையிலும், மக்களின் சிரமங்களை குறைக்கும் வகையிலும் முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்ததையடுத்து, பல்வேறு திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இம்முகாமினை நடத்துவதற்கு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிட்டுள்ளார்.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் – மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவு–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, எரிசக்தித் துறை, உள்–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சமூக சீர்த்திருத்தத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை–உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகள் சார்ந்த சேவைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்த மனுக்கள் இம்முகாம்களில் பெறப்பட்டு தீர்வு காணப்படும்.

இதுபோன்று, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் கோரிக்கை மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை கணினியில் பதிவு செய்ய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, கைபேசி எண் மற்றும் கோரிக்கை தொடர்பான உரிய ஆவணங்களுடன் மனுக்களை அளித்து, தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஏதுவாக இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ளலாம் என அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

முன்னதாக தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் பன்னத்தெரு ஊராட்சி மாராச்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.6,359–மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரத்தினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,03,600–மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,000– மதிப்பீட்டில் சக்கர நாற்காலியினையும், தாட்கோ சார்பில் 01 பயனாளிக்கு ரூ.15,00,000– மதிப்பீட்டில் நன்னிலம் மகளிர் நில உடமைத்திட்டத்தின் மூலமாக மானியத்தொகையினையும், வருவாய்த்துறை சார்பில் 06 பயனாளிகளுக்கு வருமானச் சான்று, இறப்பு உதவித் தொகை, திருமண உதவித் தொகைக்கான ஆணையினையும், 02 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டு அட்டையினையும், ஊரக வளர்ச்சி துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு நூறு நாள் வேலைத்திட்ட அட்டையினையும், 05 பயனாளிகளுக்கு தூய்மை காவலருக்கான பயன்பாட்டு பொருட்களையும், ஆய்மூர் ஊராட்சி மகாமழை மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.69,500–மதிப்பீட்டில் தாலிக்கு தங்கத்தினையும், 03 மாற்றுத்திறனாளிக்கு தலா ரூ.2,780–மதிப்பீட்டில் காதொலி கருவினையும், ஊராக வளர்ச்சி துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு நூறு நாள் வேலைத்திட்ட அட்டையினையும், 05 பயனாளிகளுக்கு தலா ரூ.5,600–மதிப்பீட்டில் தூய்மை காவலருக்கான உடையினையும், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் 05 பயனாளிகளுக்கு தலா ரூ.22,500–மதிப்பீட்டில் இறப்பு உதவித்தொகை, 03 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டு அட்டையினையும், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்காரன்புலம்–3 ஊராட்சி நாடிமுத்து உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.69,500–மதிப்பீட்டில் தாலிக்கு தங்கத்தினையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.2,780–மதிப்பீட்டில் காதொலி கருவினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,03,600 – மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், ஊரக வளர்ச்சி துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.35,00,000–மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினையும், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.26,000–மதிப்பீட்டில் திருமண உதவித்தொகையினையும், 02 பயனாளிகளுக்கு ரூ.42,500– மதிப்பீட்டில் இறப்பு மற்றும் ஈமச்சடங்கு உதவியினையும், வட்ட வழங்கல் துறை சார்பில் 02 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டையினையும், இணைய வழியில் விண்ணப்பித்த 06 பயனாளிகளுக்கு சாதி சான்று, வருமான சான்று, இருப்பிட சான்றுகளையும், இன்றையதினம் பெறப்பட்ட மனுக்களின் உடனடி தீர்வாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட தற்கான ஆணையினையும், தொழிலாளர் நலவாரியத்தின் கீழ் 01 பயனாளிக்கு நலவாரிய அட்டையினையும், 02 பயனாளிக்கு முதலமைச் சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீட்டு அட்டையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் கீழ் 03 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணையினையும், ஆதனூர் ஊராட்சி அண்டர்காடு சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.69,500 – மதிப்பீட்டில் தாலிக்கு தங்கத்தினையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.2,780–மதிப்பீட்டில் காதொலி கருவினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,03,600 – மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், ஊரக வளர்ச்சி துறை சார்பில் 12 பயனாளிகளுக்கு தலா ரூ.3,50,000–மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினையும், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் 02 பயனாளிகளுக்கு தலா ரூ.8,000 – மதிப்பீட்டில் திருமண உதவித்தொகையினையும், 03 பயனாளிகளுக்கு ரூ.62,500– மதிப்பீட்டில் இறப்பு மற்றும் ஈமச்சடங்கு உதவியினையும், வட்ட வழங்கல் துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டையினையும், வருவாய்த்துறை சார்பில் இணைவழியில் விண்ணப்பித்த 18 பயனாளிகளுக்கு வருமானச் சான்று, பிறப்பிட சான்று, சாதி சான்று, இருப்பிட சான்றுகளையும், 04 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீட்டு அட்டையினையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆணையினை என மொத்தம் 126 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 3 இலட்சத்து 93 ஆயிரத்து 979 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும் இன்று வேதாரண்யம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், மாராச்சேரி, ஆய்மூர், வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் ஆயக்காரன்புலம் – 3, ஆதனூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற முகாமில் சுமார் 1324 மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டு அவற்றில் ஒரு சில மனுகளுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. வ.பவணந்தி, வேதாரண்யம் வருவாய் கோட்டாட்சியர் திருமால், வேதாரண்யம் நகரமன்ற தலைவர் மா.மீ.புகழேந்தி, ஆத்மா குழு மாநில உறுப்பினர் மகா குமார்,

மாவட்ட ஆத்மா குழு உறுப்பினர் உதயம் முருகையேன், ஒன்றிய ஆத்மா குழு தலைவர் சதாசிவம், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சு.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் எஸ்.கே.கண்ணன், வேதாரண்யம் வட்டாட்சியர் வடிவழகன், திருக்குவளை வட்டாட்சியர் திருமதி த.கிரிஜா தேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி

# கோவை மாவட்டத்தில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு! நா.கார்த்திக் –தொ.அ.ரவி பங்கேற்பு!

திருப்பூர், மே 26 –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, கோவை மாவட்டம் முழுவதும் பெய்து வரும் கனமழை காரணமாக கோவை ரயில் நிலையம் அருகில் உள்ள கூட்ஷெட் சாலை மற்றும் உப்பிலிபாளையம் மேம்பாலம் கீழ்ப்பகுதிகளில், மழை நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, அரசினர் விருந்தினர் மாளிகையில் தென்மேற்கு பருவமழை தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் கிராந்திகுமார் பாடி, மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணை யாளர் மா.சிவகுரு பிரபாகரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கேத் பல்வந்த் வாகே, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.மோ.ஷர்மிளா, துணை மேயர் இரா.வெற்றிசெல்வன், மாநகராட்சி துணை ஆணையாளர்கள் த.குமரேசன், அ.சுல்தானா, தலைமைப் பொறியாளர் விஜயகுமார், மாநகர துணை பொறியாளர் இளங்கோவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) நிறைமதி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) மனோரஞ்சிதம், வருவாய் கோட்டாட்சியர்கள் ராம்குமார், கோவிந்தன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பெரிய கடை வீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ.பதுருதீன், வட்டக் கழகச் செயலாளர்கள் டவுன் பா.ஆனந்த், ஏ.அப்பாஸ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

அமைச்சர் செய்தியாளரிடம் கூறியதாவது : நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற இடங்களிலே மிகக் கடுமையான மழை என வானிலை அறிக்கையின் அடிப்படையில் உடனடியாக முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதன் அடிப்படையில் எல்லா ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக கோவை மாவட்டத்தில் செய்து உள்ளதாகவும், குறிப்பாக எந்தெந்த இடங்களில் பிரச்சனைகள் இருக்கும் என்பதில் ஏற்கனவே உள்ள அனுபவத்தை வைத்து அந்த இடங்களிலே தொடர்ச்சியாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளது என்றும், தண்ணீர் தேங்குவது தவிர்க்கப்படுவதின் வகையிலேயே தொடர்ச்சியாக நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர், ஆணையாளர், ஏற்கனவே மாவட்ட ஆட்சியராக இங்கு பணி புரிந்த வரை தான் மாநில திறன் மேம்பாட்டு கழக இயக்குனர் முதல்வர் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். அவருக்கு மாவட்ட முழுவதும் எங்கெங்க என்னென்ன பிரச்சனைகள் என்று தெரியும், இன்றைக்கு நாங்கள் பார்த்தது வரை மாவட்ட முழுவதும், மாநகராட்சி மட்டுமல்ல மேட்டுப்பாளையத்தில் தொடங்கி வால்பாறை வரை அத்தனை இடங்களிலும் மிக அருமையான முன்னேற்பாடுகளை செய்து உள்ளனர், ஒவ்வொரு துறையும் அதில் மிக கவனமாக கடந்த முறை என்ன ? பிரச்சனைகள் வந்ததோ, அந்த பிரச்சனைகள் மனதில் வைத்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து உள்ளனர். எனவே இந்த முறை எவ்வளவு ? மழை பெய்தாலும் அதை எதிர்கொள்கின்ற அளவிற்கு நம்முடைய அதிகாரிகள் மிக அருமையாக செய்திருக்கிறார்கள். இன்றைக்கு ரெட் அலர்ட் ஆக இருந்தாலும், ஆரஞ்சு அலர்ட்டாக மாற்றப்பட்டு உள்ளது. நாளைய தினம் கொஞ்சம் கடுமையாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் எப்படி ? இருந்தாலும் அதற்கு முன்னேற்பாடுகளை மிகச் சிறப்பாக எதிர்பார்த்ததை விட அதிகமாக செய்து இருக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அமைச்சரிடம் பேசி வருவதாகவும், மாவட்ட ஆட்சியரிடம், ஆணையரிடம் கண்காணிப்பு அதிகாரி எல்லோரிடத்திலும் அங்கு இருந்து அவர் தொடர்பு கொண்டு பேசிக் கேட்டு அறிந்ததாகவும், அதே போல் தமிழக செயலாளர் மற்ற துறையினுடைய செயலாளர்களும் பேசிக் கொண்டு உள்ளதாகவும், எனவே சரியான முன்னேற்பாடுகள், எவ்வளவு மழை வந்தாலும், அதனை சமாளிக்க கூடிய அளவிற்கு எதிர்கொள்ள நடைபெறுவதாகவும், அவரும் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அங்கு உள்ள பயனியர் விடுதியில் வைத்து என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது என்பதை பார்த்ததாகவும், அப்பொழுது சில இடங்களை பார்க்கலாம் என்று வந்து இருப்பதாக கூறியவர், இந்த இடங்களே கடந்த முறை நாங்கள் பார்க்கும் பொழுது மோசமாக இருந்ததாகவும், இந்த முறை முன்னேற்பாடுகள் சிறப்பாக செய்து இருக்கிறார்கள், கண்டிப்பாக இந்த முறை அந்தப் பிரச்சனை தவிர்த்து விடப்படும் என்றார், 90 முகாம்கள் அமைக்கப்பட்டு உள்ளதாகவும், எல்லா இடங்களிலும் என்னென்ன தேவையோ, முகாம்கள் மருத்துவர்கள் இருப்பது, போன்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டு உள்ளதாகவும், அந்தந்த முகாம்களில் அதிகாரிகள் தனியாக பணி அமர்த்தப்பட்டதாகவும், வால்பாறைக்கு ஒரு அதிகாரி பணி அமர்த்தப்பட்டு உள்ளதாகவும், முதலில் என்னென்ன பாதிப்புகள் வருகிறதோ, அந்த இடங்களை கவனிக்க கூறி உள்ளதாகவும், அவர்களுக்கு அங்கு முகாம்கள் அமைக்கப்பட்டு என்ன தேவையோ எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளதாகவும்,

மழை பாதிப்பு குறித்து தகவல் தெரிவிக்க தொடர்பு எண் வழங்கப்பட்டு உள்ளதாகவும் கூறியவர், அந்தந்த ஒன்றியத்திற்கு, நகராட்சி தனியாக அதிகாரிகள் கொடுக்கப்பட்டு உள்ளதாகவும், வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத் துறை, குடிநீர் வடிகால் வாரியம் என அனைத்து துறைகளும் ஒருங்கிணைத்து பணிகள் செய்து வருவதாக தெரிவித்தவர், ஒவ்வொரு துறையிலும் அவர்கள் செய்த பணிகளின் அறிக்கை காண்பித்ததாகவும் தெரிவித்தவர், கடந்த முறை பார்த்த பிரச்சினை களுக்கு தற்பொழுது தீர்வு ஏற்பட்டு உள்ளதாகவும், பொதுமக்கள் மழை பெய்யும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் எச்சரித்தவர், பொதுவாக குப்பைகளை சாக்கடைகளில் போடாமல் மக்கள் தவிர்க்க வேண்டும், பல்வேறு இடங்களில் குப்பைகளை போடுவதால் சாக்கடைகள் அடைத்துக் கொள்வதாகவும், ஆனால் அடைப்பு ஏற்படுவதை மாநகராட்சி தடுப்பதற்கு சிறப்பான நடவடிக்கை எடுத்து உள்ளதாகவும் தெரிவித்தார்.




சிவகங்கை நகரக் கழகம் சார்பில் “நாடு போற்றும் நான்காண்டு சாதனை தொடரட்டும் பல்லாண்டு” விளக்க பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் காசிவிஸ்வநாதன் சிறப்புரை ஆற்றினார். உடன் நகரக் கழகச் செயலாளர் நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த், வழக்கறிஞர் எஸ்.பாஸ்கரன், இளம் பேச்சாளர் சாருமதி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி மாவட்டம், கம்பம் நகராட்சி பகுதிகளில் நெகிழி பிளாஸ்டிக் ஒழிப்பு பேரணி மற்றும் விழிப்புணர்வு பேரணி கம்பம் நகர்மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன் தலைமையில் நகராட்சி ஆணையாளர் உமாசங்கர், தேனி மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரிய துணைப் பொறியாளர் நந்தா, நகரமைப்பு அலுவலர்கள் கீதா, கணேஷ்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் அன்பு குமாரி, சகிதா பானு ஆகியோர் முன்னிலையில் கம்பம் நகரில் நடைபெற்றது. பேரணியில் நகராட்சி சுகாதார அலுவலர் அரசகுமார், சக்திவேல் நகராட்சி சுகாதார பணியாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் நெகிழி குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்து விளம்பர போஸ்டர் ஒட்டி மஞ்சள் பை வழங்கினர்.